மலர் - 9 ஆகஸ்ட் - 1996 இதழ் - 8

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்

இடம் :- மணல் மேடு வீதி, ஈரோடு 638002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கிறிஸ்துவின் அழைப்பு | 1 |
| 2. | ஆவியின் கனிகள் | 8 |
| 3. | பெண்கள் பகுதி | 13 |
| 4. | ஆராதனையில் கேள்விக்குரிய காரியங்கள் | 18 |
| 5. | அற்புதங்கள் எங்கே | 20 |
| 6. | ஊற்றுதல், தெளித்தல் அல்லது முழ்குதல் எது சரி? | 27 |
| 7. | தேவனை சந்திக்க ஆயத்தப்படு | 29 |

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 AUGUST - 1996 ISSUE-8


## ஆசிரியவுரை

# "கிறிஸ்தவனின் அழைப்பு"

"அழைப்பு" என்ற அருமையான வார்த்தைக்கு அகராதியில் அநேக அர்த்தங்கள் உண்டு. அவைகளில் ஒன்று, "ஒரு குறிப்பிட்ட வேலையை நிறைவேற்றும்படியாய் அழைக்கப்படுதலைக் குறிக்கிறது." அழைப்பு என்பது ஏதாவதொரு ரூபத்தில் அவ்வப்பொழுது நம்மில் ஒவ்வொருவருக்கும் வந்து கொண்டுள்ளது. அவ்வழைப்புகளை, அதன் தன்மைக்கேற்ப ஏற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இங்கே நாம் பார்க்க இருப்பது, உலகப் பிரகாரமான ஒரு அழைப்பைப் பற்றி அல்ல. உலகத்தை மீட்கும்படியாய் வந்த இயேசுக்கிறிஸ்து, உலக மக்கள் ஒவ்வொருவருக்கும் விடுத்த அழைப்பைப் பற்றி பார்க்க உள்ளோம். "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றார். (மத். 11:28) இயேசுவின் இந்த அழைப்பை சத்தியத்தின்படி, வசன ஆதாரங்களின்படி ஏற்றுக் கொள்கிறவர்கள் கிறிஸ்தவர்களாகிறார்கள்.

இன்றைக்கு, ஒருவன் கிறிஸ்தவனாகும்படியான அழைப்பு, இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே தான் கிடைக்கிறது. அப்போஸ்தலன் பவுல் தெசலோனிக்கே சபையாருக்கு எழுதும்போது இதைப்பற்றி தெளிவாகக் கூறுகிறார். "நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்." (II தெச. 2:14) வேதம் இவ்வளவு தெளிவாகச் சொல்லி

யிருந்தும்கூட, அநேகர் தாங்கள் சொப்பனத்தின் மூலமும், ஒளியின் மூலமும், சத்தத்தின் மூலமும், ஒரு குறிப்பிட்ட வசனத்தின் மூலமும் இன்னும் பல விநோதமான காரியங்கள் மூலமாகவும் அழைக்கப்பட்டோமென்று கூறுகின்றனர். தங்களுடைய உணர்வுகளை நியாயப்படுத்த வேதத்தை யாரும் பொய்யாக்குவது நியாயமல்ல.

சரி, ஒரு கிறிஸ்தவனின் அழைப்பைப் பற்றி வேதாகமம் எப்படி விவரிக்கிறதென்று பார்ப்போம்.

## I பரம அழைப்பு

முதலாவது, இது ஒரு பரம அழைப்பு. தன்னால் மெச்சப்பட்ட பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு பவுலடியார் எழுதும்போது, "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த **பரம அழைப்பின்** பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (பிலிப். 3:14) என்கிறார். மேலும் எபிரேய ஆசிரியர், "இப்படியிருக்க **பரம அழைப்புக்குப்** பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே. . . ." என்று சொல்கிறார். (எபி. 3:1)

கிறிஸ்தவனின் அழைப்பு, "பரம அழைப்பு" என்று சொல்லப்படக் காரணம் உண்டு. இந்த அழைப்பை, இயேசுக் கிறிஸ்துவைக் கொண்டு, அவருடைய சுவிசேஷத்தினாலே கொடுத்தவர் தேவன். அந்தத் தேவன் வாசம் செய்வது பரலோகம். இந்த அழைப்பைப் பூரணமாக நிறைவேற்றும் போது, நாம் செல்வது பரலோகம். இந்த அழைப்புக்குப் பங்குள்ளவர்களாக மாறும் பொழுது இப்பூமியில் நமக்குக் கிடைப்பது பரலோக மகிழ்ச்சி. ஆகவே கிறிஸ்தவனின் அழைப்பை "பரம அழைப்பு" என்று சொல்வது பொருத்தமானதே. இந்த அழைப்புக்கு நாம் நம்மை முற்றிலும் தகுதியாக்கிக் கொள்ளவேண்டுமெனில், "**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாட வேண்டும்**" (கொலோ. 3:2)

## II பரிசுத்தத்திற்கான அழைப்பு

விசுவாசத்தில் தான் பெற்றெடுத்த உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில், பவுலடியார் கிறிஸ்தவனின் அழைப்பை **பரிசுத்த அழைப்பு** என்று கூறுகிறார். "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல்...... நம்மை இரட்சித்து **பரிசுத்த அழைப்பினாலே** அழைத்தார். (IIதீமுத். 1:9) "பரிசுத்தம்" என்ற வார்த்தைக்கும் பல பொருள் உண்டு. அவைகளில் ஒன்று பிரித்தெடுக்கப்படுதலாகும்.

ஒரு கிறிஸ்தவன் பரிசுத்தமாயிருக்கும்படி பிரித்தெடுக்கப்பட்டவன். தேவன் இவனுடைய பாவத்தை மன்னித்து, அவருடைய பரிசுத்த நோக்கத்திற்காக தெரிந்தெடுத்திருக்கிறார். கொரிந்தியர் நிருபம் என்ன சொல்கிறதென்று பாருங்கள்''உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயிலும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள். நீதிமான்களாக்கப்பட்டீர்கள் (I கொரி. 6:11)

ஆக, கிறிஸ்தவனாகும்படியான அழைப்பு, உலகத்திலிருந்தும், உலகத்தின் பாவங்களிலிருந்தும், உலகத்தின் அதிபதியாகிய பிசாசின் பிடியிலிருந்தும் ஒருவனைப் பிரித்தெடுக்கும் அழைப்பு.

ஏன் பரிசுத்தத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்கும் பேதுரு காரணம் கூறுகிறார். ''**உங்களை அழைத்த தேவன் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்** (I பேது. 1:15) பரிசுத்தம் வலியுறுத்தப்படுவதற்கான காரணத்தை எபிரேய ஆசிரியர் கோடிட்டுக் காட்டுகிறார் பாருங்கள். ''யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபி. 12:14)

## III கிரியைக்கான அழைப்பு

அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில், ''. . . ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்'' என்று கூறிவிட்டு, (II கொரி. 5:17), எபேசியரில், எதற்காகப் புது சிருஷ்டியாக்கப்பட்டோமென்று காரணத்தையும் கூறுகிறார். ''**ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். . . . .** (எபே. 2:10)

''கிரியை'' என்றால் வேலை. ''நற்கிரியை'' என்றால் நல்ல வேலை. தேவனுக்காக நாம் செய்யும் ''நல்லவேலை'' எதுவாக இருக்க முடியும்? நம்முடைய கைகளின் பிரயாசத்தையும், உழைப்பின் பலனையும் நம்பி அவர் இல்லை என்பதை நாம் நன்றாகவே அறிவோம். இயேசுக்கிறிஸ்து இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்து சொல்வதற்கு முன் ''ஒரு வேலையை'' தம்முடைய சீடர்களிடம் ஒப்படைத்துச் சென்றார். அந்த வேலைதான், பிறகு கட்டளையாக அங்கீகரிக்கப்பட்டது. இந்நாட்களில் அது பிரதான கட்டளையாக வர்ணிக்கப்படுகிறது. ''**ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா,**

குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். (மத். 28:19, 20)

இந்தக் கட்டளையை நிறைவேற்றும்படியாகத் தான் அப்போஸ்த லர்கள் 12 பேரும், இயேசுவால் விசேஷமாய் சந்திக்கப்பட்ட பவுலடி யாரும் நாடுகள் பல கடந்து, தாங்க முடியாத வேதனைகளையும் விவரிக்க முடியாத துன்பங்களையும் அடைந்தனர். சரி, இயேசுக் கிறிஸ்து, சீஷர்களுக்குத்தானே கட்டளை கொடுத்தார், நமக்கென்ன என்கிறீர்களா? ஒவ்வொரு கிறிஸ்தவனும் வேதாகமத்தால் சீஷன் என்றே அழைக்கப்படுகிறான். (அப். 6:1) அப்படியானால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் எதற்காக அழைக்கப்பட்டுள்ளான்? நற்செய்தியை அறிவிக்கும்படிதானே!

சிலுவையைப் பற்றி நாம் உபதேசிக்கும்பொழுது, உலகம் நம்மைப் பைத்தியம் என்று சொல்லும் (I கொரி. 1:18) கவலை வேண்டாம். உலகமானது யாரை ஞானிகளென்று சொல்கிறதோ அவர்கள் தேவனுடைய பார்வையில் ஞானவான்களல்ல. மாறாக, ஆத்து மாக்களை ஆதாயம் செய்கிறவனே ஞானவான். (நீதி. 11:30)

## IV ஒப்புரவாக்குதலின் அழைப்பு

இந்த ஒப்புரவாக்குதலின் ஊழியம் என்றால் என்ன என்பதைக் குறித்து பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுக் கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்க ளுக்கு ஒப்புக் கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தா ருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளா யிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்கிறோம். (II கொரி. 5:18-20)

பாவத்தினாலே மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான். மனிதன் தான் பிரிந்து போனானே ஒழிய தேவன் இதற்கு எவ்விதத் திலும் காரணமல்ல. பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில்

உட்பிரவேசித்தபோது, அன்பும் கிருபையும் கொண்ட தேவன், இரட்சிப்பின் திட்டத்தைத் தீட்டினார். அதைத் தம்முடைய ஒரே பேறான குமாரனைக் கொண்டு நிறைவேற்றினார். இங்கே மனிதன் செய்ய வேண்டிய வேலை, இயேசுக் கிறிஸ்துவைக் கொண்டு அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதன் மூலம் தேவனோடு ஒப்புரவாக வேண்டும்.

அப்போஸ்தலர்களிடத்தில் ஒப்புரவாக்குதலின் ஊழியம் ஒப்புக் கொடுக்கப்பட்டது. (வ. 18). ஒப்புரவாக்குதலின் உபதேசமும் ஒப்புக் கொடுக்கப்பட்டது (வ. 19). ஆகவே, ஒப்புரவாகுங்கள் என்று வேண்டிக் கொள்கிறோம் என்றார் (வ. 20)

ஒப்புரவாக்குதல் என்றால், பகையாயிருப்பவனை நட்பாக்குதல் எனக் கொள்ளலாம். இங்கே மனிதன் பாவத்தினால் தேவனுக்குப் பகையாக மாறினான். விரோதியானான். பிரிந்து போனான். தேவனுக்குப் பகைவனாக மாறிய மனிதனுக்குச் செய்யும் உபதேசம் தான் ஒப்புரவாக்குதலின் உபதேசம், அந்த ஒப்புரவாக்குதலுக்குக் காரணமாக இருக்கின்ற இயேசுவைப் பற்றியும், அவருடைய தியாகத்தைப் பற்றியும், அவருடைய இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் போதிப்பதே ஒப்புரவாக்குதலின் உபதேசம். இந்த ஒப்புரவாக்குதலைச் செய்யும் வேலை தான் ஒப்புரவாக்குதலின் ஊழியம்.

அன்றைக்குத் தேவன் ஒப்புரவாக்குதலின் வேலையை அப்போஸ்தலர்களிடம் ஒப்படைத்தார். அவர்களும் அதைச் செம்மையாக நிறைவேற்றினர். இன்று அந்த வேலையை யார் செய்வது? ஜிப்பா அணிந்த பாஸ்டர்களும், அங்கி அணிந்த பாதிரிகளும், சம்பளம் வாங்கும் உபதேசியார்களும், "அற்புத" வியாபாரிகளும் அதற்கெனவே இருக்கிறார்கள் என்று சொல்கிறீர்களா? இல்லை. இல்லவே இல்லை. இயேசுக் கிறிஸ்துவின் நாட்களில், இவர்களைப் போல பக்தியின் வேஷம் போட்டு சமுதாயத்தில் வலம் வந்த, பரிசேயர்களை, இயேசுவானவர் "குருடரான வழிகாட்டிகள்" என்றும் "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்" என்றும் சாடினார். (மத். 23 : 24, 27)

அப்படியானால் அது யாருடைய வேலை? ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை உண்மையாய் ஏற்று, வசனத்திற்கு மாத்திரம் தங்களை ஒப்புப் கொடுத்து கிறிஸ்துவுக்குள் நல்வாழ்வு வாழ்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமை. கிறிஸ்தவன் இந்த ஒப்புரவாக்குதலின் ஊழியத்திற்காகவும் அழைக்கப்பட்டுள்ளான்.

## V நம்பிக்கையின் அழைப்பு

இறுதியாக கிறிஸ்தவனின் அழைப்பு "நம்பிக்கையின் அழைப்பு" (எபே. 1:18) நம்பிக்கை என்பதின் ஒரு பொருள் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலுக்காகக் காத்திருப்பதாகும். பொறுமையோடே காத்திருப்பது.

அப்போஸ்தலன் பேதுரு தான் எழுதின இரண்டாம் நிருபத்தில், **"உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்"** (II பேது. 1:10) என்று சொல்லி விட்டு, அடுத்த வசனத்தில் இப்படியாகக் குறிக்கிறார். "இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய **இயேசுக் கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும்** பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" என்கிறார் (வ. 11)

உரோமையருக்குப் பவுலடியார் எழுதும் போது, "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத் தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" என்கிறார். (ரோம. 8:18)

ஆகையால், கிறிஸ்தவனின் அழைப்பு, **"கிறிஸ்துவின் நித்திய இராஜ்ஜியத்துக்கும்" "இனி வெளிப்படும் மகிமைக்கும்"** காத்திருக்கும் அழைப்பு. இந்த நம்பிக்கை பவுலடியாருக்கு இருந்தபடியால் தான், ". . . கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப் பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" (பிலி. 3:12) என்றும், ". . . . பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர்கிறேன்" (3:13) என்றும் கூறுகிறார்.

மீண்டும், **"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"** என்றும் (பிலி. 1:21) அவரால் சொல்ல முடிந்தது. அவருடைய நம்பிக்கையைப் பற்றி இன்னும் கூட பொருள் பொதிந்த அர்த்தத்தோடு சொல்வதை கவனமாகக் கவனியுங்கள். ". . . தேகத்தை விட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு அதிக நன்மையாயிருக்கும். . ." (பிலி. 1:23)

கிறிஸ்தவனே, உங்களுக்கும் எனக்கும் இப்படிப்பட்ட நம்பிக்கை உண்டே? வெளிப்படப்போகும் மகிமையின்மீது நம்முடைய நம்பிக்கையை ஆழமாக வைக்கும் போது தான், அந்த மகிமைக்கு வழிவகுக்கும் சுவிசேஷத்தின் மீது நமக்கிருக்கும் நம்பிக்கை பலப்படும்.

உறுதிப்படும். அப்பொழுது தான் நாம் கர்த்தருக்குள் படும் பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து உறுதிப்பட்டவர்களாயும், அசையாத வர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்க ளாயும் இருக்கமுடியும் (1 கொரி. 15:58)

இதை வாசிக்கும் அன்பான சகோதரரே! நம்முடைய நிலை எப்ப டிப்பட்டதாக உள்ளது? ஒரு வேளை நாம் கிறிஸ்தவராக இருந்தால், நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடப்பது அவசியம் (எபே. 4:1) ஒருவேளை குறைகள் இருப்பின் இன்றே நிவர்த் திப்போம். பரம அழைப்பை நாம் உதாசீனம் செய்ய வேண்டாம் பரிசுத்த அழைப்பை, பரிசுத்த குலைச்சலாக்க வேண்டாம். கிரியை இல்லாத செத்த கிறிஸ்தவனாக இருக்க வேண்டாம். பாவம் மறுபடியும் குறுக்கே வந்திருக்குமானால், மீண்டும் தேவனோடு ஒப்புரவாகுவோம். பரலோக நம்பிக்கையில் இடி விழுந்திருக்குமானால், தெளிவாகச் சொல்லப்பட்டுள்ள அந்த நம்பிக்கைக்காக, நம்முடைய விசுவாசத்தைப் புதுப்பிப்போம்.

என் அருமை நண்பரே! உங்களுடைய நிலை எப்படி? இயேசுவைக் கொண்டு கொடுக்கப்பட்ட, பரத்திலிருந்து வந்த அழைப்பை ஏன் இன்னும் ஏற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்? "நாட்கள் பொல்லாதவைக ளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று வேதம் கூறுகிறதே. ஆகவே, ஒவ்வொருவரும் விசுவாசித்து மனந்தி ரும்பி, இயேசுக் கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வோம். அதன் மூலம் இயேசு தாமே தம்முடைய சொந்த இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த சபையில் அங்கமாக மாறுவோம். கிறிஸ்தவன் என்ற உன்னத நாமத்தை சத்தியத்தின் அடிப்படையில் தரித்துக் கொள்வதின் மூலம் வாடாத ஜீவ கிரீடத்திற்குச் சொந்தமாவோம். (II தீமுத். 4:8)

EZS ராஜநாயகம்

# தேவனுடைய அழைப்பு

தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

**I. பேது 1 : 16**

# ஆவியின் கனிகள்

மாம்சத்தின் சில கிரியைகளைப் பற்றி பவுல் பட்டியலிட்டுக் காட்டிய பின்னர், அதற்கு மாறான ஆவியின் கனிகளைப் பற்றி இப்போது பேசுகிறார். அவர் கூறினார் : "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைந்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்" (கலாத்தியர் 5:22-26) எபேசு பட்டணத்தை கிறிஸ்தவர்களுக்கு பவுல் கூறினார் : "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். (ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்.) கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்" (எபேசியர் 5:8-10)

இப்போது, ஆவியை அடைந்திருப்பது என்றால் என்ன பொருள்? கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, நாம் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெறுவதாக பேதுரு கூறினார். (அப். 2:38) அப்படியானால், பரிசுத்த ஆவியின் வரத்தை நாம் பெற்றால், நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம். (அப். 5:32) அப்போஸ்தலர்களால் கைகளை வைக்கப் படத் தேர்ந்தெடுத்த ஏழு பேர்களும் ஆவியால் நிறைந்திருந்தனர். (அப். 6:3)

பவுல் நமக்குச் சொல்லுகிறார் : "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம். அது மாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ

அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.'' (ரோமர் 5:1-5) மீண்டுமாக அவர் கூறினார் : ''தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமா யிருக்கிறது'' (ரோமர் 14:17)

பவுல் தொடர்ந்து பேசுகையில் இவ்விதமாகச் சொல்லுகிறார் : ''ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத் தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தி னின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும் படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவ மாம்சத்தின் சாயலா கவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார். அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதான முமாம். எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியா மலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாய் இராமல் ஆவிக்குட்பட்டவர்களாய் இருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. மேலும் கிறிஸ்து உங்களில் இருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ள தாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயி ருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ஆகையால் சகோதரரே, மாம்சத் தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. மாம்சத் தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள்

தேவனுடைய புத்திரராய் இருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப் படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோ மென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும் படிக்கு அவருடனேகூட பாடுபட்டால் அப்படி யாகும்." (ரோமர் 8:1-17).

கிறிஸ்தவனில் ஆவியானவர் எப்படி கிரியை செய்கிறார் என்பதை பவுல் விளக்கிச் சொல்லுகிறார்: " அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்." (ரோமர் 8:26, 27).

தீத்துவுக்கு பவுல் எழுதுகிறார் : "ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமா யிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனிதர் மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியை களினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலி னாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்க ளாக்கப்பட்டு, நித்திய ஜீவன் உண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந் தருளினார்." (தீத்து 3:3-7)

மீண்டுமாக, ஆவியுடன் இருத்தல் என்றால் என்ன? நாம் மேலே படித்த எல்லா சுவிசேஷ வசனங்களிலும், தேவனுக்குக் கீழ்ப்படிந்த வர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ளு கின்றனர். இது அற்புதங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த

ஆவி, என்றாலும் தேவனும் கிறிஸ்துவும் கிறிஸ்தவனில் வாழ்வதைப் போல இன்னும் பரிசுத்த ஆவியானவரும் அவனில் வாழ்கிறார். (1 கொரி. 8:6). மாம்சமான சரீரமானது பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருக்கிறது என்று பவுல் கூறினார். (1 கொரி. 3:16, 17; 6:19, 20).

நமது பலவீனங்களைத் தாங்கிக் கொள்ளவும், தேவனுடைய விருப் பப்படி, நமக்காகக் வேண்டுதல் செய்யவும் ஆவியானவர் நமக்கு உதவு கிறார். சுவிசேஷத்தில் வெளிப்படுத்தியுள்ளபடி நாம் ஆவியினுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படித்திருக்கிறோம் என்பதை அறிந்து, நாம் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றியுள்ளதால் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று ஆவியானவர் அதாவது ஆவியின் வார்த்தைகள், நமது ஆவியையும் ஏற்றுக் கொள்ளுகிறார்.

ஆவியினுடைய வார்த்தையின் வழி நடத்துதலைப் பின் பற்றியும் ஆவியை உடையவராகவும் நாம் இருப்பதால், பின் ஆவியின் கனிகளை நாம் கொடுக்கிறோம். இந்தக் கனிகளைப் பற்றி பவுல் குறிப் பிடுகிறார். அவையாவன, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். இவற்றின் பொருளை நாம் அனைவரும் அறிவோம் என்பதால், இவற்றை விளக்கத் தேவையில்லை. எந்தச் சட்டமும் தடைசெய்ய இயலாத நல்ல காரியங்களாக இவை இருக்கின்றன. அல்லது, இந்தக் கனிகளை உண்டாக்க வசனத்திற்கு அப்பால் அல்லது தனியாக ஒரு அற்புதமோ பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்தலோ அவசிய மில்லை. ஒருவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, ஆவியின் வசனத்திற்கு ஏற்றவாறு தொடர்ந்து நடக்கும் போது இந்தக் கனி உருவாகிறது.

கிறிஸ்தவனைப் பற்றியும், அவனுடைய வாழ்வில் ஆவியானவரின் பங்கைப் பற்றியும் சுவிசேஷம் நிறையச் சொல்லுகிறது. என்றாலும் வருந்தத்தக்க காரியம் என்னவென்றால், அற்புதங்கள் தொடர்பாக மாத்திரமே பலர் ஆவியானவரைக் காணுகின்றனர். கிறிஸ்துவில் விசுவாசமுள்ள பலர், ஆவியானவரைப் பற்றிப் பேசப்படும் எந்தக் காரியத்தையும் கூச்சத்துடன் ஒதுக்கி விடுகின்றனர். ஏனென்றால், கிறிஸ்தவர்களின் வாழ்விலே இன்று பரிசுத்த ஆவியானவர் அற்பு தமான காரியங்களைச் செய்கிறார் என்று அவர்கள் விசுவாசிப்பதாக அல்லது உபதேசிப்பதாக பிறர் குற்றஞ் சாட்டி விடுவார்களோ என்ற அச்சமே காரணம். என்ற போதிலும், நாம் இரு கடைக்கோடிகளுக்கும் சென்றுவிடத் தேவையில்லை. மாறாக, அப்போஸ்தலர்களுடைய காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் பணியில் செய்த அற்புதங்களைப் பற்றியும், பின்னர் அற்புதங்கள் அல்லாத யுகத்தில், நமது காலம் உட்பட,

கிறிஸ்தவர்கள் சம்பந்தப்பட்ட காரியத்தில் ஆவியானவரின் பணி என்ன என்றும் நிதானித்துப் பார்க்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் இன்று செய்யாத காரியங்களை அவர் செய்வதாக நாம் கற்பிக்க விரும்பவில்லை. அல்லது பரிசுத்த ஆவியானவரையும் கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் இன்றைய பங்கையும் ஒதுக்கித் தள்ள நாம் விரும்பவில்லை.

J.C. சோட்

## இயேசு கிறிஸ்து வருகிறார்

1. அவருடைய வாக்குறுதியை நிறைவேற்ற வருகிறார். வெளி 22 : 12

2. அவனவனுடைய கிரியைகளின்படி பலன் அளிக்க வருகிறார். வெளி 22 :12

3. எல்லாக்காரியங்களுக்கும் ஒரு முடிவு உண்டாக்க வருகிறார். II தெச 1 : 7–10

4. வானத்தையும் பூமியையும் அழித்துப்போட வருகிறார். (2 பேது 3 : 10)

5. மரித்துப் போன நல்லவர்களையும், தீயவர்களையும் கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்ப வருகிறார். (யோவான் 5 : 28, 29)

6. மனுக்குலம் அனைத்தையும் நியாயம் தீர்க்க வருகிறார். (யோவான் 12 : 48)

7. தம்முடைய பிள்ளைகள் அடங்கிய இராஜ்ஜியமாகிய சபையை தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்க வருகிறார். (1 கொரி 15 : 24)

## பெண்கள் பகுதி

# "சாறிபாத் விதவை"

பழைய ஏற்பாட்டிலுள்ள I ராஜாக்களின் புஸ்தகம் பதினேழாம் அதிகாரத்தில் ஒரு புறஜாதிப் பெண் ஒளிந்திருக்கிறாள். அவள் வாழ்ந்த காலம் இஸ்ரவேலை ராஜாக்கள் ஆண்ட காலம். இஸ்ரவேலை சில நல்ல ராஜாக்கள் ஆண்டிருந்தாலும் இவளுடைய நாட்களில் இஸ்ரவேலை ஆண்ட ராஜா மிகப் பொல்லாதவன். தெய்வ பயமில்லாத, தன் மனைவியின் சொல்லுக்கு மண்டியிட்டு இஸ்ரவேலை அந்நிய தேவர்களை நோக்கி வழிநடத்தினான். ஒரு கட்டத்தில் தேவன் தன்னுடைய மகிமையை இஸ்ரவேலுக்குகாட்ட விரும்பி தீர்க்கதரிசிகளிலே சிறப்பிடம் பெற்றவனாகிய எலியாவை இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபிடம் பேசும்படியாக அனுப்பினார்.

. . . . . எலியா ஆசாபை நோக்கி, "என் வாக்கின்படியேயன்றி இந்த வருஷங்களிலே பனியும், மழையும் பெய்யாதிருக்குமென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான். (I ராஜாக்கள் 17:1) அவனுடைய வாக்கின்படியே தேசத்திலே மழைபெய்யாமல் கடுமையான பஞ்சம் வந்தது. புதிய ஏற்பாட்டு ஆசிரியராகிய யாக்கோபு தன்னுடைய நிருபத்தில் இவ்வாறாக எழுதியுள்ளார். "எலியா என்பவன் நம்மைப் போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் மழைபெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான். அப்பொழுது மூன்று வருஷமும், ஆறு மாதமும் பூமியின் மேல் மழை பெய்யவில்லையென்று (யாக். 5 : 17)

ஆனால் எந்நிலையிலும் தன்னுடைய உண்மைப் பிள்ளைகளை கைவிடாத நமது தேவன் அப்பொழுது ஏற்பட்ட கடுமையான பஞ்சத்திலிருந்து தமது தாசனைக் காப்பாற்ற விசேஷித்த ஏற்பாட்டைச் செய்தார். அவனைக் கேரீத் ஆற்றண்டைக்கு போகச் சொல்லி, பறவைகளிலே அற்பமாய் எண்ணப்படும் காக்கையைக் கொண்டு இரண்டு வேளையும் சிறப்பாக போஷித்தார். இரண்டு வேளையும் நிம்மதியாக சாப்பிட்டு ஆற்றுத் தண்ணீரை குடித்து நாட்களை கழித்து வந்தான்.

தொடர்ந்து மழையில்லாமல் போனபடியால் மழையை நம்பி ஓடிவரும் ஆற்றிலும் தண்ணீர் வற்றி விட்டது. அந்நிலையில் தன் பிள்ளையைப் பட்டினிபோட விரும்பாத தேவன் அவனுடைய சரீரத் தேவைகளை சந்திக்க ஒரு

திட்டம் தீட்டி புறஜாதிப் பட்டண மாகிய சாறிபாத்துக்குப் போக பணித்தார். கர்த்தருடைய வார்த் தைக்கு தன்னை ஒப்புக் கொடுத்த எலியா கர்த்தரின் கட்டளைப் படியே அங்கு சென்ற பொழுது தான், மரித்து நூற்றாண்டுகள் பல ஆகியும் இன்னும் பேசிக் கொண்டிருக்கும் விதவையை சந்திக்கிறான். வேதாகமத்தில் அவளுடைய பெயர் இடம் பெறுவதற்கு கூட தகுதியில்லாத வளாக அன்றைக்கு அவள் இருந் துள்ளாள்.

அந்த சிறப்பான ஸ்திரீயோடு எலியா செய்த உரையாடல் விசேஷமானது. முற்றிலும் அறிமுகமில்லாத சற்றும் சம்மந்த மில்லாத இருவருக்கு நடந்த உரையாடல் அது. தேவன் தனக் காக யாரை ஆயத்தம் செய்து வைத்திருக்கின்றார் என்று தெரியாத நிலையில், நீண்ட தூர நடைப் பயணத்தால், விடாய்த்துப் போன நிலையில் இங்கே ஒரு சந்திப்பு ஏற்படுகிறது.

அப்பொழுது அந்த ஸ்திரீயி னுடைய நிலையோ இன்னும் மோசமானது. அவள் ஒரு விதவை இந்நாட்களில் இருப் பதைப் போல் ஒய்வூதியமோ, முதியோர் காப்பகங்களோ, இன்னும் அரசாங்கத்தால் கிடைக் கும் சில பாதுகாப்புகளோ அப் பொழுது இல்லை. கடுமையான பஞ்சம். தன்னையும், தன் மகனையும் காப்பாற்ற முடியாத நிலையில் சாவின் எல்லைக்கு அவள் வந்துவிட்டாள். அவளு டைய வார்த்தையின்படி அந்த நாள் தான் அவள் பூமியில் உயிரோடிருக்கும் கடைசி நாள் (1இராஜா 17:12)

இந்தப் பிண்ணனியில் தான் சந்திப்பு ஆரம்பமாகிறது. எலியா அங்கே தயங்கி, தயங்கி முதலில் தண்ணீர் கேட்கிறான் (வசனம் 10) அவள் தண்ணீர் கொண்டு வர காலடி வெத்தபொழுது கொஞ்சம் அப்பமும் உன் கையி லே கொண்டுவா என்று கேட் டான். "அதற்கு அவள், பானை யில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமேயல் லாமல் என்னிடத்தில் அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லு கிறேன். இதோ, நானும், என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப் போக அதை எனக்கும், அவனுக் கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்" (வசனம் 12)

அப்பொழுது எலியா அவளைப் பார்த்து, "பயப்படா தே, நீ போய் உன் வார்த்தை யின்படி ஆயத்தப்படுத்து ஆனா லும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டு வா பின்பு உனக்கும், உன் குமாரனுக்கும் பண் ணலாம் (வ. 13) அது மாத்திர மல்ல எலியா, தொடர்ந்து அப்படிச் செய்தால் பானையின்

மா செலவழிந்து போவதுமில்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து போவதுமில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். இஸ்ரவேலின் தேவனுடைய கர்த்தர் சொல்லுகிறார் என்று எலியா சொன்ன வார்த்தைகளை நம்பி அந்தச் சூழ்நிலையில் அவள் செயல்பட்டு பஞ்சம் தீருமட்டும் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்கிறாள் (வச. 14, 15) கர்த்தர் சொன்னபடியே பானையிலே மா செலவழிந்து போகவுமில்லை, கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவுமில்லை. அவளுக்கு ஆசீர்வாதம் இரண்டு மடங்காக அல்ல, பல மடங்காக கொடுக்கப்பட்டதென்று நாம் அறிகிறோம்.

பெயர் எழுதப்படக்கூட தகுதியில்லாத இந்த புறஜாதி விதவை, சாவின் விளிம்பிலே நின்றபொழுது ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்ட விதவை, 20ம் நூற்றாண்டின் இறுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களாகிய நமக்கு சில அற்புதமான பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறாள்; கற்றுக் கொள்வோமாக!

முதலாவது, இவள் ஒரு புறஜாதிப் பெண்ணாக இருந்தபொழுதும் அந்நியரை உபசரிக்க வேண்டுமென்ற நற்குணம் பொருந்தியவளாக இருந்துள்ளாள். எலியா இவளிடத்தில் வந்தபொழுது அவனுடைய ஒட்டுமொத்த தோற்றமே வித்தியாசமானதாக இருந்திருக்கும். ஏனெனில் அவன் வசித்தது காட்டுக்குள் அவன் உடுத்தியது தோல் உடை இன்னும் சில வேறுபாடுகள் அவனிடத்தில் இருந்தது. சரீரத் அப்பொழுது இவளுடைய நிலையோ சாவை ருசிபார்க்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அந்நிலையிலும் இவள் அந்நியரை உபசரித்துள்ளாள். இஸ்ரவேலின் தேவன் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன் என்று எலியா வாக்குக் கொடுத்தபோது அந்த இஸ்ரவேலின் தேவனைப் பற்றி இவளுக்கு அதிகம் தெரியாது.

ஒருவேளை நாமாக இருந்தால் என்ன எண்ணியிருப்போம். நம்மை தந்திரமாக ஏமாற்றி, இருப்பதை பிடுங்கி தின்னலாம் என திட்டமிடுகிறாள் என நினைத்திருப்போம். இவனிடம் பேசினால் வம்பு என வேகமாக நடந்திருப்போம். ஆனால் இந்த ஏழை விதவையோ அந்த நிலையிலும் உபசரித்துள்ளாள். அதன் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டுமுள்ளாள். நாமும் கூட நம் வாழ்க்கையில் மற்றும் குறைவில் இருக்கிறவர்களுக்கு உதவி செய்யக் கூடியவர்களாக, உபசரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். வேதாகமம் இக்குணத்தை பெரிதும் வரவேற்கிறது. எபிரேய ஆசிரியர் என்ன கூறுகிறார் என்று பாருங்கள் "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் அதினாலே சிலர் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" (எபி 13:2).

இரண்டாவதாக பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யக்கூடிய மக்களாக இருக்க வேண்டும். அதுவும் முதலிலே அவர்களுடைய சரீரத் தேவைகளை சந்திக்கிறவர்களாக இருக்க வேண்டும். எலியாவை இவள் ஏதோ ஒரு விதத்தில் தேவனுடைய மனுஷன் என்பதை அறிந்து கொண்டாள். ஆகையால் தன்னுடைய தேவையைக் காட்டிலும் அந்த தேவ மனிதனின் தேவையைச் சந்திப் பது முதன்மையானது என எண்ணினாள். அவன் முதல் எனக்கு ஒரு அடையைச் செய்துவா என்று சொன்ன போது அப்படியே செய்தாள். அதன் மூலமாக ஆசீர்வதிக்கப் பட்டாள்.

இயேசுக் கிறிஸ்து இந்த பூமியில் இருந்த போது "சீஷன் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்தேயு 10:24) ஆகவே நாமும் நம்முடைய வாழ்க்கையிலே இந்த விதவையைப் போல தேவனுடைய உண்மைப் பிள்ளைகளைக் கண்டறிந்து அந்த பரிசுத்தவான்களுக்கு உதவி செய்வோமானால் அந்த விதவையையும், அவள் வீட்டாரையும் ஆசீர்வதித்த பரலோகத்தின் தேவன், நம்மையும், நம் குடும்பத்தாரையும் ஆசீர்வதிப்பார் என்பதிலே எந்த சந்தேகமும் வேண்டாம்.

மூன்றவதாக, கர்த்தரை நம்புகிற பிள்ளைகளுக்கு கடைசி நிமிடத்திலே கூட ரட்சிப்பு உண்டு என்பதை இந்த விதவையின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அவள் விறகு பொறுக்கினபொழுது இன்றைக்கு சாப்பிடுவதுதான் கடைசி ஆகாரம் என நினைத்தாள். ஆபிரகாம் ஈசாக்கை பலியிட்ட பொழுது கத்தி பிள்ளையாண்டான் — மேல் படவில்லையேயொழிய ஆபிரகாமின் மனதிலே ஈசாக்கை பலியிட்டு விட்டான். அதைப் போல இந்த விதவை சாகவில்லையே ஒழிய, சாவை ருசி பார்த்து விட்டாள். அந்த நிலையிலும் கர்த்தருடைய மனிதனின் வார்த்தைகளை நம்பினாள் காப்பாற்றப் பட்டாள்.

இதைத்தான் சங்கீதக்காரன் சொல்லும் பொழுது, நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர் உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும் என்று. ஆகவே நாம் நம் முடைய வாழ்க்கையில் இதற்குமேல் இனி என்ன நடக்கப் போகிறது இனி யாரால் நம்மைக் காப்பாற்ற முடியும் என்று நினைக்காமல் இறுதி மூச்சுவரை தேவனுக்கு உண்மையாக இருப்போம்

என்றால், அவருக்குப் பயந்து நடப்போமானால் நாம் காப்பாற்றப்படுவது திண்ணம் ஆசிர்வதிக்கப்படுவது உறுதி.

இறுதியாக அவள் இவ்விதமாக ஆசீர்வதிக்கப்பட்டதற்கு ஒரு சிறப்பான காரணம் இருக்கிறதை மறந்துவிடக் கூடாது. 17ம் அதிகாரம் 15ம் வசனம் இவ்விதமாகச் சொல்லுகிறது அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள். அவளுடைய ஆசீர்வாதத்திற்கான தாரக மந்திரம் இதுதான். ஆம் அவள் எலியாவின் சொற்படி செய்தாள். அன்றைக்கு எலியாவின் வாக்கு அவளுக்கு தேவவாக்கு. அந்த வார்த்தைகளுக்கு அவள் கீழ்ப்படிந்தாள். ஆசீர்வதிக்கப்பட்டாள்.

இன்றைக்கு நாம் எதற்கு கீழ்ப்படிய வேண்டும்? அன்றைக்கு அந்த விதவைக்கு தேவனுடைய வார்த்தை கையிலே இல்லை இன்று பரிசுத்த ஆவியானவராலே கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகளடங்கிய வேத புத்தகம் நம்மிடம் உண்டு. நாம் ஆசீர்வதிக்கப்பட அந்த வார்த்தைகளுக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

ஆனால் அநேகர் தேவனுடைய வார்த்தையை ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு மனிதனால் இயற்றப்படும் கோட்பாடுகளுக்கும், உணர்வுகளுக்கும், கட்டுக்கதைகளுக்கும் செவி கொடுக்கின்றனர். ஆனால் இயேசுக் கிறிஸ்து தன் மலைப்பிரசங்கத்தில் நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனை கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" என்று கூறியுள்ளார். (மத். 7:24).

இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளைகளே, "சாறிபாத் ஊர் விதவை" நமக்கு எல்லா வகையிலும் சிறந்த முன்மாதிரியாய் இருக்கிறாள். உயிரிலும் மேலாக தேவனுடைய பிள்ளைகளைக் கருதுகிறாள். இஸ்ரவேலின் தேவன்மேல் அவ்வளவு அசைக்க முடியாத நம்பிக்கை வைக்கிறாள். நாமும் கூட அவளைப்போல் தேவன் சொற்படி செய்து குடும்பமாக ஆசீர்வாத்தை வாழ்நாள் முழுவதும் அனுபவிப்போம். தேவனின் ஆசீர்வாதமானது விசேஷித்த ஒன்று. நம்முடைய கண்களுக்கு அது ஆச்சரியமாகத்தான் தோன்றும்.

விசேஷமாக குடும்பத்தின் முக்கிய பங்கை வகிக்கும் பெண்களாகிய நாம் முற்றிலும் அவருக்கு கீழ்ப்படிந்து அவர் சொன்னபடி செய்து அளவில்லாத ஆசீர்வாதத்தை நமக்கும் நம் கணவருக்கும் நம் அருமைப் பிள்ளைகளுக்கும் பெற்றுத் தருவோம். அவ்வாறு செய்ய பிதாவாகிய தேவன் தம் குமாரன் மூலமாக நமக்கு முழு பெலனையும் விசுவாசத்தையும் கட்டளையிடுவாராக!!

ரேச்சல் ராஜநாயகம்

# ஆராதனையில் கேள்விக்குரிய காரியங்கள்

கர்த்தரின் வழியில் காரியங்களைச் செய்வதில் மனிதக்குலம் ஒருபோதும் திருப்தி அடைவதில்லை. தேவன் செய்யச் சொல்லும் காரியங்கள் சம்பந்தமாக அவர்கள் எப்போதும் கேள்வி கேட்பதும், புதியவற்றை அறிமுகப்படுத்துவதும், சோதிப்பதுமாக இருக்கின்றனர். இதற்கு நல்ல ஒரு உதாரணம் ஆராதனையாகும்.

தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டுமென்றும், தேவனுடைய விருப்பத்தின் படியும், அறிந்து கொண்டும் தொழவேண்டுமென நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. (யோவான் 4:24) ஆனால் பலருக்கு இது போதுமானதாக இருப்பதில்லை. எனவே, மனிதனுடைய கட்டளைகளின் படியேயும், உபதேசங்களின் படியேயும், அவர்கள் தொழத் தொடங்குகின்றனர். (மத்தேயு 15:9) வாத்திய இசைக்கருவிகளுடன், கைகளைத் தட்டியும், கிட்டத்தட்ட இசைக் கருவிகளைப் போன்ற சப்தங்களை வாயினால் எழுப்புவதையும் அவர்கள் சேர்த்துக் கொள்ள விரும்புகின்றனர்.

இப்போது, இங்கே தவறு என்ன நடக்கிறது? நமது ஆராதனையில் நாம் தேவனைப் பிரியப்படுத்த முயற்சிக்கிறோமா அல்லது நம்மையும் பிறரையும் மகிழ்விக்க முயலுகிறோமா?

கர்த்தர் விரும்பும் ஆராதனைக்கு நாம் வரும்போது சங்கீதங்களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் நமது இருதயங்களில் நாம் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணவேண்டுமென அவர் கூறியிருக்கிறார். (எபே. 5:19) இசைக் கருவிகளை பயன்படுத்துவதில் தவறு என்ன? அவற்றை சரியாகப் பயன்படுத்தும் போது தவறு ஏதுவுமில்லை. ஆனால் ஆராதனையில் அவற்றைப் பயன்படுத்தாமலிருப்பதின் எளிய காரணம் என்னவென்றால், சில உயிரற்ற, உணர்ச்சியற்ற வாத்தியங்களின் மூலமாக அவர் புகழைப்பாடுவதற்குப் பதிலாக, தேவனுடைய படைப்புகள் அவரைத் தொழுது கொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார். அவரைப் பிரியப்படுத்துவதை தேவன் விரும்புகிறார் இதுவே அவரைப் பிரியப்படுத்துகிறது.

பாடும்போது கைகளைத்தட்டி ஓசை எழுப்புவதைப் பற்றிக் கூறினால், அதற்குப் பதிலாக மத்தளம், தவுல் ஆகியவற்றைக் கொண்டு வந்து அடிக்கலாமே! ஏனெனில் கை தட்டுவதும், மத்தளம் அடிப்பதும் ஒரே பலனைத்தானே தருகின்றன? அந்த இரு நிகழ்ச்சிகளிலும் வாய்ப்பாட்டுகளினால் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுவதுடன், ஒருவன் எதையோ தட்டி சத்தத்தை உண்டு பண்ணுகிறான். அதற்கும் மேலாக, கை தட்டுதல் உணர்ச்சிகளை எழுப்பி, ஒவ்வொருவரையும் கிளர்ச்சியூட்டவும் மகிழ்விக்கவும் உதவுகிறது. இன்னுமாக அது பாடல்களை அமுக்கிப் போடவும், பாட்டின் பொருள் புரியாதபடி

செய்யவும், முடிவற்ற பெரும் சத்தத்தில் போய் முடியவும் செய்கிறது. நிச்சயமாக, இவ்விதமான ஆராதனையை கர்த்தர் விரும்பவில்லை. கர்த்தரின் பிள்ளைகள் கைகளைத் தட்டிக் கொண்டு பாடி ஆராதனை செய்தார்கள் என்பதாக எந்த ஒரு உதாரணத்தையும் சுவிசேஷத்தில் நீ நிச்சயமாக படிப்பதில்லை.

ஆனால், நமது ஆராதனையில் வாத்திய இசைக்கருவிகளை இணைப் பதைப் பற்றி என்ன? வாத்திய இசைக் கருவிகளை ஆராதனையில பயன்படுத்த கர்த்தர் விரும்பியிருந்தால், அவருடைய வசனத்தில் அவ்வாறு கூறியிருப்பார். ஆனால், வாய்ப்பாட்டுகளுடன் இவைகளை இணைத்தால் என்ன தப்பு? இவை மனிதனின் கண்டு பிடிப்புகளே வெறும் சப்தங்களை உண்டாக்கும் இசைக் கருவிகள், கர்த்தருடைய அனுமதியின்றி ஆராதனையில் புகுத்தப்பட்ட ஒன்று. நாம் பாடவேண்டும் என்றும், வார்த்தைகளை பயன்படுத்தி அதன் வழியாக நமது எண்ணங்களைத் தெரிவிக்க வேண்டுமென்றும், ஒருவருக்கொருவர் உபதேசிக்கவும் ஊக்கப்படுத்தவும் வேண்டுமென அவர் கேட்கிறார். மக்களைக் கவரவும், மகிழ்விக்கவும் பயன்படும் விந்தையான சில காரியங்கள் மூலமாக இல்லாமல், கர்த்தர் இந்த வழியில் புகழப்படுகிறார்.

நாம் தேவனை எவ்வாறு தொழுது கொள்ள வேண்டும் என்பதை அவர் தெளிவாக்கியிருக்கிறார். அது ஏதோ புதுமையும் வித்தியாசமுமான காரியம் அல்ல. சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு புதிய முறையும் அல்ல அது. மாறாக, அது நூற்றாண்டு காலமாக கர்த்தருக்கு செலுத்தப்பட்டு வரும் புகழ்ச்சியும் கனமும் ஆகும். கர்த்தருக்கு அது சோர்வை உண்டாக்கவில்லை. அவர் சலிப்படையவும் இல்லை, அல்லது ஒரு மாற்றத்தை விரும்பவும் இல்லை. நாம் ஞானவான்களாக இருப்பின், கர்த்தருடைய வசனத்தில் கூறியபடி நாம் அவரை தொழுது கொள்ளுவோம். நமது இருதயத்திலிருந்து அவ்வாறு செய்வோமானால், அது பழமையாகவும் இருக்காது சலிப்படையவும் செய்யாது. மாறாக, நாம் எவ்வாறு செய்யவேண்டுமென கர்த்தர் விரும்புகிறரோ அவ்வாறே நாம் செய்வதால் எப்போதுமே அது நமக்கு புத்துணர்ச்சி தருவதாகவும், புதுமையாகவும் இருக்கும்.

நமது வாய்களைத் திறந்து கர்த்தரைப் புகழும் பாடல்களை உற்சாகமாகவும், உணர்ச்சியுடனும் பாடி, கிறிஸ்துவுக்குள் ஜீவனோடு வர நமக்குத் தேவன் உதவி செய்வாராக!

நமது இருதயத்தின் தியானத்தோடும் நமது வாயின் வார்த்தையாலும் நாம் தேவனை ஆராதிக்கவும், ஒருவருக்கொருவர் கற்றுக் கொள்ளவும் நாடுவோம். தேவனுடைய வழியைக் காட்டிலும் சிறந்த வழி ஒன்றை நாம் சிந்திக்க முடியுமா?

**J.C. Choate** தமிழில் : எஸ்.எஸ். ராஜன்

# அற்புதங்கள் எங்கே?

சில வாரங்களுக்கு முன்பு, நான் பெங்களூரில் தங்கியிருந்த போது, ஒரு வானொலி போதகர் சில நாட்களாக அங்கு பிரசங்கங்கள் நடத்திக் கொண்டிருப்பதாக விளம்பரங்களைப் பார்த்தேன். அவர் தேவனுடைய வரங்களைப் பெற்று, அற்புத சுகமளிக்கும் வல்லமையை அடைந்துள்ளதாகவும் வண்ணச் சுவரொட்டிகள் பல வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தன. அவர் பிரசங்கங்கள் நடத்திக் கொண்டிருந்த நாட்களில் நான் அங்கிருந்த போதிலும், எந்த ஒரு அற்பு தமும் அங்கு நடைபெற்றதாக நான் கேள்விப்படவுமில்லை; ஒருவரும் அங்கு அற்புதங்கள் நடந்ததாகக் கூறவுமில்லை. பத்திரிகைகளும் அது பற்றிய செய்திகள் எதையும் வெளியிடவில்லை. அந்த விளம்பரச் சுவரொட்டிகளைக் காணாதிருந்திருப்பேனாகில், அந்தப் போதகர் பற்றிய எதுவும் எனக்குத் தெரிந்திருக்காது. அப்படியானால், அற்பு தங்கள் என்னவாயிற்று? அப்படி ஏதாவது நடந்ததா? அந்தக் கூட்டத்தில் ஒரே ஒரு அற்புதம் நடைபெற்றிருந்தாலும், பெங்களூர் நகரம் முழுவதும் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்திருக்கும் என உங்களுக்குத் தெரியாதா? ஆனால் அப்படி எதுவுமில்லை. எனவே, அங்கே எந்த அற்புதமும் நடைபெறவில்லை என்பதை நானும், நியாய உணர்வுள்ள ஒவ்வொருவரும் அறிவோம். ஆனால், சந்தேகமின்றி, அந்தக் கூட்டத் திற்கு சம்பந்தப்பட்டவர்கள் அங்கே சில அற்புதங்கள் நடைபெற்றதா கத்தான் கூறுவார்கள். ஆனால் அவர்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

அதேபோல, சென்னையிலும், அற்புத சுகமளிக்கும் அதே போன்ற கூட்டங்களுக்கு அனைவரையும் அழைத்துக் கொண்டிருந்த பல வண்ணச் சுவரொட்டி விளம்பரங்களை ஆங்காங்கே காண முடிந்தது நான் அங்கு சென்றிருந்தபோது, அந்தக் கூட்டங்கள் ஏற்கனவே நடந்து, முடிந்து சென்னையை விட்டே சென்று விட்டிருந்த நேரம். என்றாலும், அங்கு எந்த ஒரு அற்புதமும் நடைபெற்றதாக எவருமே பேசிக் கொள்ள வில்லை. ஏதாவது ஒரு சிறு அற்புதம் அங்கு நடைபெற்றிருந்தாலும் கூட சென்னை நகரம் முழுவதுமே நாட்கணக்கில் அது பற்றி பேசிக் கொண்டிருந்திருக்கும். ஆனால் நண்பர்களே, இங்கும் எந்த அற்புதமும் நடைபெறவில்லை என்ற மற்றுமோர் முடிவுக்கு நாம் வருகிறோம்.

அடுத்து, இலங்கை பெந்தெகொஸ்தே சபையும், "அசம்பளிஸ் ஆப் காட்" என்ற சபையும் இணைந்து கொழும்பு நகரில் ஆவிக்குரிய எழுப்

புதல் கூட்டங்கள் நடத்தினர். அற்புதங்களை எதிர் பார்த்து அனைவரும் வருக என்று விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தன. பெந்தெகொஸ்தே இயக்கத்தைச் சார்ந்த ஒரு இளம் பெண்ணிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது, பாஸ்டர் பவுல் என்பவருக்கு கர்த்தர் தோன்றி, அவருடைய மக்களின் ஒற்றுமைக்காக ஒரு திட்டத்தை அவருக்கு வெளிப்படுத்தியிருப்பதாக அவர் கூறினார். யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு போதகரைப் பற்றி அப்பெண்மணி குறிப்பிடும் போது, தேவன் அவர் வழியாக கிரியைகள் செய்து கொண்டிருப்பதாகச் சொன்னார். ஆனால், அந்தப் பெண் குறிப்பிட்ட அந்த போதகரை நான் சில வருடங்களுக்கு முன்பே அறிந்திருந்தேன். முன்பு அவர்"அசெம்பளிஸ் ஆப் காட்" சபையிலிருந்தார். என்னை அணுகி, கர்த்தரின் சபையில் சேர்க்கப்பட்ட தான் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதாகக் கூறி, அவ்வாறு செய்தார். ஆனால், நாங்கள் அவருக்கு எவ்வித பண உதவியும் செய்யத் தயாராக இல்லை என்பதை அவர் கண்டுபிடித்தபோது, கொஞ்ச நாட்களில் திடீரென அவருக்கு விருப்பம் எதுவும் இல்லாமற் போயிற்று. தான் எங்கிருந்து வந்தாரோ அதே அசெம்பளிஸ் ஆப் காட் சபைக்கே திரும்பி போய் விட்டார். அதுமட்டுமல்லாமல், பல காரியங்களில் அவருடைய பெயர் இலங்கையில் கெட்டுப் போயிருந்தது. ஆனாலும் சில மக்கள் அவரை தேவனுடைய ஊழியன் என்றும், அற்புதங்களைச் செய்யும் வல்லமை படைத்தவர் என்றும் நம்புகின்றனர். எவ்வளவு கேவலம் பாருங்கள்

இவை அனைத்தையும் காணும் போது, ஏமாறுவதும் கள்ளப் போதகங்களை நம்புவதும் மக்களுக்கு எவ்வளவு எளிதில் முடிகிறது. இவ்வாறு இருக்கக் காரணம், பலர் தவறான வழி நடத்துதலை விரும்புவது மட்டுமல்லாமல், ஏமாந்து போகவும் தயாராக இருக்கின்றனர். தயவு செய்து இங்கே சொல்லப் போகிறவைகளைக் கவனமாகப் படித்து, உங்கள் வேதாகமம் போதிப்பதோடு ஒப்பிட்டுப் பார்த்து, முடிவு செய்யுங்கள்.

கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும் இவ்வுலகில் இருந்த காலத்தில், எவ்வளவு வித்தியாசமாக இருந்தது என்பதைக் காண சுவையாக உள்ளது. அவர்கள் அற்புதங்களைச் செய்தனர்; ஆனால் எவ்வித விளம்பரமும் செய்யவில்லை. அடுத்து போகவிருக்கும் ஊருக்கு முன் கூட்டியே ஆட்களை அனுப்பி பெரும் கூட்டங்களைச் சேர்க்கும் ஏற்பாடுகளைக் கவனிக்கவில்லை. அற்புதங்கள் நடைபெறுகின்றன, விசுவாசத்துடன் வாருங்கள் என்பது போன்ற அழைப்புகளை யாருக்கும் அனுப்பவில்லை. காரணம் என்னவென்றால், அவர்கள் மக்கள் மத்தியிலே பிரபலமடைவதற்காகவோ, அல்லது வியாதிக்காரர்களை சுகப்படுத்த வேண்டுமென்றுகூட அப்போது அற்புதங்கள்

நடைபெறவில்லை. பரிபூரண சுகத்தை அனைவரும் அடைய பாத்தியப் பட்டவர்கள் என்றோ, அவர்களுடைய விசுவாசத்தால் அதை அடையலாம் என்றோ அவர்கள் போதிக்கவில்லை. அவர்களுடைய செயல்கள் அவிசுவாசிகளின் மத்தியில் இருந்தன; அவர்களை விசுவாசிகளாக்கவும், வசனத்தை உறுதிப்படுத்தவுமே ஒருசில அற்புதங்களும் நடைபெற்றன. அப்போஸ்தலர்களைப் பற்றி நாம் படிக்கிறோம் : " அவர்கள் புறப்பட்டுப் போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களாலே வசனத்தை உறுதிப்படுத்தினர். ஆமென்." (மாற்கு 16:20) எபிரேய எழுத்தர் கூறுகிறார் : "ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாத படிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவ தூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரததக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்தது மாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிப் போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?" (எபி. 2:1-4) புதிய ஏற்பாடு அப்போது தரப்படாதிருந்தது. எனவே, அப்போஸ்தலருடைய உபதேசங்களை உறுதிப்படுத்த அல்லது தேவனுடைய வசனத்தை மட்டுமேதான் அவர்கள் போதிக்கின்றனர் என்பதை நிரூபிக்க வேண்டி அற்புத அடையாளங்கள் நடைபெற்றன. ஆனால் இன்றைய நிலை என்ன? இப்போது புதிய ஏற்பாடு நம்மிடம் உள்ளது. அது உறுதி செய்யப்பட்டுள்ளதா? மிகவும் நிச்சயமாக எனவே, அற்புதங்களுக்கு எந்த தேவையும் இன்றும் இல்லை. தேவன் இன்று யாருக்கும் தோன்றுவதுமில்லை; அல்லது கொடுக்கப்பட்டுள்ள வசனத்தையல்லாது வேறு எதையும் யாரிடமும் பேசுவதுமில்லை. ஏனெனில், தேவனுடைய வசனம் என ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அந்த வசனத்தின் வழியாக நம்மிடம் அவர் பேசுகிறார். தேவன் அவருடைய குமாரன் வழியாக இன்று நம்முடன் பேசுகிறார். (எபி. 1 : 1, 2; மத். 17:5). அது எழுதப்பட்டிருக்கிறது, எல்லா நற்கிரியைகளையும் செய்த மனிதனை தகுதியுள்ளவனாக்குகிறது. (2 தீமோ 3:16, 17; 2 பேதுரு 1:3; யாக். 1:25) சத்தியத்தை அறிந்து கொள்ளவும், அதை விசுவாசிக்கவும் நாம் அதைப் படிக்க வேண்டும்; கற்றுக் கொள்ள வேண்டும்.

(2.தீமோ. 2:15; யோவான் 17:17; 8:32; ரோமர் 10:17). அதை எந்த வழியிலும் மாற்றக் கூடாது. (வெளி. 22:18, 19). எனவே, இன்று அற்புதங்களைச் செய்வதாகக் கூறுபவர்கள் மோசடிப் பேர் வழிகள், ஆள்மாறாட்டக்காரர்கள். அதே போல, தேவனுடைய வசனத்திற்கும் மேலாக, தங்களோடு தனியாக தேவன் பேசியிருக்கிறார் என்று கூறி வருவோர் கள்ளப் போதகர்கள் இவர்கள், தேவன் தன்னிடம் நேரில் பேசி ஒற்றுமைக்கான ஒரு திட்டத்தைத் தந்திருப்பதாகக் கூறும் பாஸ்டர் பவுல் போன்றவர்கள் கர்த்தர் ஏற்கனவே இப்படிப்பட்ட ஒற்றுமைக்காக ஜெபித்துள்ளார். மேலும் புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலர்களுடைய காலத்திலிருந்தே ஒற்றுமைக்கான திட்டத்தைக் காணமுடியும். (யோ 17: எபே. 4: 1-6) அப்படியிருக்கும் போது, பின்னர் தேவன் இவரிடம் பேசி தனியாக ஒரு திட்டத்தை ஏன் கொடுக்கவேண்டும்? அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் என்றும் சுவிசேஷம் கூறுகிறது. (மத். 7:16). இலங்கை பெந்தெகொஸ்தே சபையை உண்டாக்கிய இந்த பாஸ்டர் பவுல் ஒரு போதகர் மட்டுமே, சுவிசேஷத்தின் பிரகாரமான பாஸ்டர் அல்ல. (1 தீமோ. 3:1-7). இந்த சபை, வேதாகமத்தில் நாம் படிக்கும் சபைக்கு முற்றிலும் முரண்பாடானது, தேவனின் ஒற்றுமைத் திட்டத்திற்கு விரோதமானது. மேலும், கர்த்தர் தன்னிடம் நேரில் பேசினார் என்பதாக இவர் கூறுவது, கர்த்தரை பட்சபாதமுள்ளவராக்குகிறது. அதோடு வேதாகமம் இன்னும் பூரணமாகத் தரப்படவில்லை என்றாகிறது. இவை அனைத்தும் அவரை ஒரு கள்ளப் போதகரென தோலுரித்துக் காட்டுகின்றன.

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய வசனங்களைக் கேளுங்கள் : "அன்றியும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நான் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய சில பாவ மனிதன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத் தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச்

சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும் போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடையவாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற் போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுக்கிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்." (2 தெசெ. 2:1-12). மீண்டுமாக பவுல் எழுதுகிறார்" ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள். . . . " (1 தீமோ. 4:1-2). தொடர்ந்து அவர் கூறுகிறார் : "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்." (2 தீமோ. 4:1-4). இறுதியாக, கிறிஸ்துவே கூறுவதைக் கவனியுங்கள் : "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்

தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்." (மத். 7:21-23).

ஏமாற்றப்படுவதும், திசை திருப்பப்படுவதும் மிகவும் எளிதானது என்பதை மேலே கண்ட சுவிசேஷ வசனங்களின் மூலமாகவும், இன்னும் உள்ள பல வசனங்களின் மூலமும் சகலரும் அறிந்து கவனமாக நடக்க வேண்டும். இவை அற்புதங்கள் சம்பந்தப்பட்டவை மட்டுமல்லாது, கொள்கை சம்பந்தப்பட்டவைகளாகவும் இருக்கிறது. ஆனால், இன்று அற்புதங்கள் நடைபெறுகின்றன என்று போதிப்பவர்களைக் கவனித்தால், அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்குப் பெற்றிருப்பதாக உரிமை கொண்டாடுவதையும், நீங்கள் காண்பீர்கள். ஆனால் அவர்கள் அங்கத்தினர்களாக இருக்கும் சபைகளைப் பற்றி வேதாகமத்தில் எதையும் காணமுடியவில்லை; மனிதன் உண்டாக்கிய பெயர்களையும் பட்டங்களையும் தரித்துக் கொள்ளுகின்றனர்; கர்த்தர் அவர்களிடம் நேரிடையாகப் பேசுவதாகக் கூறுகின்றனர்; ஆனால் அவர்களுக்கு அளிக்கப்படுவதாகக் கூறப்படும் அவருடைய செய்தி எப்போதுமே சுவிசேஷத்திற்கு மாறுபாடானதாக இருக்கிறது. எனவே, அவர்களை அது ஆள்மாறாட்டாக்காரர்கள் எனக் காட்டுகிறது மேலும், பல வித்தியாசமான குழுக்களாக இவர்கள் செயல்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் உதவியால் அற்புதங்களைச் செய்வதாக உரிமை கொண்டாடுவதை நீங்கள் காணமுடியும் ஆனால் இந்த குழுக்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று சிண்டு பிடித்துக் கொண்டு சண்டை போட்டுக் கொள்ளுகின்றன. இன்னும் பல பிரிவினை சபைகளிலிருந்தும் இப்படிப்பட்ட உரிமை கொண்டாடுவோர் புறப்பட்டுள்ளார்கள். எனவே, கேள்வி இதுதான் வித்தியாசப்பட்டவர்களை, வித்தியாசமான குழுக்களுக்கு வழிநடத்தி, வேறுபாடானவைகளைப் போதிக்கவும். ஒருவருக்கொருவர் சண்டை பிடிக்கவும் பரிசுத்த ஆவியானவர் உதவி செய்வாரா? ஆம் என்றால், பரிசுத்த ஆவியானவர் தம்மைத் தாமே எதிர்க்கிறார். இந்த ஜனங்களிடம் ஒரு ஆவி இருக்கிறதென்று நீங்கள் கருதினால், அது நிச்சயமாக பரிசுத்த ஆவி அல்ல என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என நான் கருதுகிறேன்.

சந்தேகமில்லை, இவர்கள் நம்மிடம் திரும்பி வருவார்கள், வந்து, "நீங்கள் தேவனுடைய வல்லமையை இன்று விசுவாசிப்பதில்லை; ஏனென்றால் நீங்கள் அற்புதங்களை விசுவாசிப்பதில்லை" என நம்மை நோக்கி விரலை நீட்டிக் கூறுவார்கள். ஆனால் அவர்களுடைய கூற்று

தவறு. ஏனென்றால், நாம் எப்போதுமே தேவனையும் தேவனுடைய வல்லமையையும் விசுவாசிக்கிறோம். ஆனால், கடந்த காலத்தில் செய்ததைப்போல் அல்லாமல், அற்புதங்கள் வழியாக தேவன் கிரியை செய்வதை இன்று தேர்ந்தெடுக்கவில்லை. அற்புதங்கள் செய்ய வேண்டுமென்று கருதினால், அவரால் அது கூடாதது அல்ல. முதல் மனிதனை அவர் பூமியின் மண்ணிலிருந்து உண்டாக்கினார். இன்றும் அவ்வாறு மனுக்குலத்தை அவர் உண்டாக்க முடியும், அவர் விரும்பினால் ஆனால் அவர் வல்லமையுள்ள தேவன் என்று நிரூபிக்கத் தேவையில்லை. ஏனென்றால் அவர் ஏற்கனவே தம்மை நிரூபித்துள்ளார். மேலுமாக, இயற்கை சட்டத்தின் வழியில் இப்போது ஆணையும் பெண்ணையும் படைக்கிறார். அவர் விரும்பினால், நோயாளிகளை சுகமளிக்கக் கூடும், குருடர்களைப் பார்வை அடையச் செய்ய முடியும், மரித்தோரை எழுப்ப முடியும். ஆனால் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் எதுவுமில்லை. அவருடைய வசனத்தின் வழியாக உபதேசிக்கவும், விசுவாசிகளை உண்டாக்கவும், இரட்சிக்கவும், நம்பிக்கை உண்டாக்கவுமாக இப்போது அவர் கிரியை செய்கிறார். அற்புதங்கள் எதை நிரூபிக்கின்றன? அவை நடந்து கொண்டிருந்தபோது கூட, குழந்தைத்தனமானது என்னும் ஒழிந்து போகும் என்றும் கூறப்பட்டன. (1 கொரி. 13:8-12) அவ்வாறே நடந்தன.

சிலருடைய நம்பிக்கைக்கு விரோதமாக, இன்று ஒரு அற்புதமும் நடைபெறவில்லை. நடைபெற்றால், எங்கே நடக்கின்றன? யாரால்? யாரின் மேல்? அதன் அவசியம் என்ன? தேவனுடைய வசனத்திற்கு நீங்கள் திரும்ப வேண்டுமென்ற உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதை படியுங்கள், அதை விசுவாசியுங்கள், அதற்குக் கீழ்ப்படியுங்கள், உங்களை இரட்சித்து நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கை அளித்திட தேவையானவற்றிற்கும் அதிகமாக அதில் இருப்பதைக் காண்பீர்கள். வேறு எதை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

**J.C. Choate** **J.C. சோட்**

## இரட்சிப்பின் வசனம்

*சகோதரரே, ஆபிரகாமின் சந்ததியில் பிறந்தவர்களே, தேவனுக்குப் பயந்து நடக்கிறவர்களே, இந்த இரட்சிப்பின் வசனம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.*

**அப்போஸ்தலர் 13 : 26**

# ஊற்றுதல், தெளித்தல் அல்லது முழ்குதல் - எது சரி?

திருமுழுக்குக்கு ஒரு மாற்றாக பாவிகளின் மேல் தண்ணீரை ஊற்றவோ அல்லது தெளிக்கவோ புதிய ஏற்பாட்டில் ஒரு முன்னுதாரணமும் கிடையாது. அவர்கள் திருமுழுக்குப் பெற்றனர் அதாவது தண்ணீரில் முழுக்கப்பட்டனர்.

திருமுழுக்கிற்கு மாற்றாக ஊற்றுதல் அறிமுகமான முதல் சம்பவம் வேதாகமம் எழுதி முடிக்கப்பட்டு அநேகமாக 150 ஆண்டுகளுக்குப் பின் நடைபெற்றதாகத் தெரிகிறது. கி.பி. 251ம் ஆண்டில் - தேவனிடமிருந்து எந்த அதிகாரமும் இல்லாமல் - நொவேதியான் நோயுற்று படுக்கையிலிருக்கையில் ஒருவன் அவன் மேல் தண்ணீர் ஊற்றினான். ஆனால் உடனே அதை திருமுழுக்கிற்குப் பதிலாக மக்கள் ஏற்றுக் கொண்டு விடவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின், கிறிஸ்துவை விசுவாசித்த மக்களிடையே ஊற்றுதல் பரவலாக கடைபிடிக்கப்படவில்லை.

இறுதியாக, சிலர் மக்கள் மேல் வெறுமனே தண்ணீர் தெளித்து அதையே திருமுழுக்கு என அழைக்க ஆரம்பித்தனர். தெளித்தலும் பிந்தைய பல நூற்றாண்டுகள் வரை பரவலாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கி.பி. 1311-ல், ராவென்னா என்னுமிடத்தில் 12 பேர் கொண்ட ஆலோசனை சங்கம், திருமுழுக்குக்கு தெளித்தல் போதுமானது என அறிவித்தது. வேதாகமம் எழுதி முடிக்கப்பட்டு ஏறக்குறைய 1200 ஆண்டுகள் கழித்து இது நிகழ்ந்தது. இந்த மாற்றத்தைச் செய்ய இவர்கள் தேவனிடம் எந்த விதமான அதிகாரத்தையும் பெறவில்லை.

திருமுழுக்குப் பெற வேண்டுமென்ற கர்த்தரின் கட்டளைக்கு ஒரு மனிதன் மேல் வெறுமனே தண்ணீரை ஊற்றினாலோ அல்லது தெளித்தலோ அவன் கீழ்ப்படிவதில்லை. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மொழியில், "பாப்டிஸோ" (baptizo) என்றால் "முழுக்கு, அமிழ்த்து, ஆழ்த்து " எனப் பொருள். இன்னும் அந்த வார்த்தைக்கு அதே அர்த்தம் தான். ஆங்கிலத்தில்கூட திருமுழுக்கு என்பதற்கு முழுக்குதல் என்பதாகத்தான் பல வசனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் மூன்றைப் பார்ப்போம் :

"இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்" (அப். 8:38).

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோம. 6:3-4)

"ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்." (கொலோ. 2:12)

பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட, ஒரு பாவி நற்செய்தியைக் கேட்க வேண்டும்; அதை விசுவாசிக்க வேண்டும்; மனந்திரும்ப வேண்டும் (பாவத்திலிருந்து முற்றிலுமாக மாற முடிவு செய்தல்), இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என விசுவாசிப்பதாக அறிக்கை செய்ய வேண்டும். பின் பாவங்கள் மன்னிக்கப்பட, தண்ணீரில் திருமுழுக்குப் பெற வேண்டும். (மாற்கு 16:15, 16; அப். 2:38; 8:35-39; 22:16; ரோமர் 10:9-10).

உனது பாவங்கள் மன்னிக்கப்பட தண்ணீரில் திருமுழுக்கு பெற்றிருக்கிறாயா? இல்லையெனில், கர்த்தரின் இந்தக் கட்டளைக்கு காலதாமதமின்றி உடனே நீ கீழ்ப்படிய வேண்டியது அவசியமாகும். கிறிஸ்துவுக்கு உனது வாழ்க்கையை ஒப்புக் கொடுப்பதைவிட வேறு முக்கியமானது வேறு ஒன்றுமில்லை.

Royce Fredrick

**எஸ்.எஸ். ராஜன்**

## ஞானஸ்நானம் என்பது முழ்குதல்

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

**தீத்து 3 : 5**

# உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு

"ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமானது" (எபி. 10:31) என்பதை அறிந்த தீர்க்கதரிசி ஆமோஸ் கூறினார். "இஸ்ரவேலே, உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு" - ஆமோஸ் 4:12.

பழைய ஏற்பாட்டில் பிரபலமான வசனப்பகுதியில் ஒன்று பிரசங்கி 12:13, 14 வசனங்களாகும்: காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனிதர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்தில் கொண்டு வருவார்"

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய விசுவாசத்தின் அடிப்படை உண்மைகளில் ஒன்று, தேவன் "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" - அப். 17:31; 2 கொரி 5:10; வெளி. 20:11-15. அந்த மகத்தான நாளிலே "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கு ஒப்புவிப்பான்" - ரோமர் 14:12.

தேவனை சந்திக்க ஆயத்தமாகும்படி, நற்செய்திக்கு கீழ்ப்படிந்து, கிறிஸ்து வழியாக அவரோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்க வேண்டும். தயவு செய்து யோவான் 14:6; ரோமர் 1:16,17 மாற்கு 16:16; அப். 2:38 ஆகிய வசனங்களைப் படியுங்கள். தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டவர்கள் 'ஒரே சரீரத்தில்' (எபே. 2:16) அதாவது 'சபை'யில் (கொலோ. 1:18) இருக்கிறார்கள். இயேசுவின் உயிர்ப்புக்குப்பின் வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளிலே சுவிசேஷத்தை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே திருமுழுக்குப் பெற்ற மக்கள் (அப். 2:1:47) தேவனால் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அந்த மக்களைப் போலவே இன்றும் விசுவாசித்து, கீழ்ப்படியும் அனைவரையும் அப்போஸ்தலர் காலத்தில் எந்த சபையில் தேவன் இணைத்தாரோ அதே சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். ஏனெனில், "தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல; ஆனால் எந்த ஜனத்திலாயினும்

அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனோ அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்".
- அப். 10:34, 35.

கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கம் வகிக்கும் சகலரும் தாங்கள் அழைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் வண்ணமாக "தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகில் வாழ்ந்து, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமான இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி, அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்"
தீத்து 2:11-14.

தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாக நாம் வாழ்வது எப்படி என மிகவும் தெளிவாகவும் குறிப்பிட்டும் விளக்குகிறார் அப்போஸ்தலர் பேதுரு "... நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களைத் தான் சுத்தகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்ஜியத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்,'. 2 பேதுரு 1:5, 11.

உன் தேவனை சந்திக்க ஆயத்தப்பட உண்மையான ஒரே வழி உன் தேவனோடு வாழ்வதுதான். அப்படியானால் அவரை சந்திப்பது உனக்குக் க டினமாகவோ புதுமையாகவோ இருக்காது.

உன் தேவனை சந்திக்க "இன்றே" ஆயத்தப்பட வேண்டும் ஏனென்றால் "ஒரு நாள் பிறப்பிப்பதை நீ அறியாயே" (நீதி 27:1)

"நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய் அங்கே ஒரு வருடம் தங்கி, வியாபாரஞ் செய்து சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள் நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே" - யாக்கோபு 4:13, 48.

"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போகும்; பூதங்கள் வெந்து உருகிப் போகும், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." 2 பேதுரு 3:9,10.

"எந்த நீதிபதியின் கைகளில் நமது உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறதோ அவரைப் பழிப்பது மகா தவறான செயலாகும். ஆனால் இவ்வுலகம் முழுவதையும் நீதி செலுத்துபவரின் கைகளில் நமது நித்திய வாழ்வே ஒப்படைக்கப்பட்டிருக்கையில் அவரைப் உதாசீனப்படுத்துவதை மேலே சொன்ன செயலோடு ஒப்பிடுவதே புத்தியீனமான செயல் அல்லவா?"

"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிற (யோவான் 14:6) நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" - மத்தேயு 11:28

"மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்கு வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" - எபிரேயர் 7:25.

"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்".
- வெளி. 22: 17.

G.F. ரெயின்ஸ்

# தேவன்

1. சிருஷ்டிப்பின் தேவன். ஆதி 1:1

2. இருக்கிறவராகவே இருக்கிற தேவன். யாத் 3:13-15

3. உன்னதமான தேவன். ஆதி 14:18-20

4. வல்லமையுள்ள தேவன். ஆதி 35:11

5. பர்வதத்தில் பார்த்துக் கொள்ளப்படும் என்ற தேவன். ஆதி 22:14

6. கேடகமும் மகாப்பெரிய பெலனுமாயிருக்கிற தேவன். ஆதி 22:14

7. யுத்தங்களின் தேவன். I சாமு 17:47

8. சமாதானத்தின் தேவன். I தெச. 5:23

9. நீதியாயிருக்கிற கர்த்தர் எரேமி. 23:6

10. மனுஷரில் ஒருவரும் கண்டிராத தேவன். I தீமோத். 6:16.

தெரிந்துஎடுக்கப்பட்டது

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, ஆகஸ்ட் - 1996
ஆகஸ்ட் THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

# -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வ்ழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701